


Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com


| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: |
|---|---|
| | |

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: | Register Number: |
|---|---|
| | |

# TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

# பகுதி-அ - பொது தமிழ்
# Part-A- General Tamil
## 8 ஆம் வகுப்பு - பழைய புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. பொருத்துக.

a. மது - 1.மயங்கி
b. தியங்கி - 2.தேன்
c. சம்பு - 3.நிலவு
d. மதியம் - 4.நாவல்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 1 4 2

2. நாடகச் சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து – என்று பாடியவர் யார்.

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கவிமணி
(D) நாமக்கல் கவிஞர்

3. கீழ்வரும் சொல்லின் சரியான பிரித்தலைக் காண்க. குவியுமென்று

(A)குவியும் +என்று
(B)குவியும் +யென்று
(C)குவி +என்று
(D)குவி +யென்று

4. விவேகசிந்தாமணியின் ஆசிரியர் யார்.

(A)சமணமுனிவர்
(B)புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு
(C)நாதகுப்தனார்
(D)ஔவையார்

5. ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருவது ----- பெயர் ஆகும்.

(A)பொருட்பெயர்

(B)ஆகுபெயர்

(C)வினைத்தொகை

(D)வேற்றுமைத்தொகை

6. உடைந்த ஏரியை பார்க்க------ திரண்டு வந்தது.

(A)மன்னர்

(B)ஊரே

(C)மக்கள்

(D)எதுவுமில்லை

7. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. இக்கால ஔவையார் என்று திரு.வி.க பாராட்டுவார்
2. 409 பாடல்களைக் கொண்ட இராமலிங்க சுவாமிகள் சரிதல் இயற்றினார்
3. திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை என்ற ஊரில் பிறந்தார்.
4. காந்திபுராணம் 2034 பாடல்களை கொண்ட நூலை இயற்றியவர்

மேற்கண்ட வாக்கியங்களுடன் தொடர்புடைய நபர் யார்.

(A)அம்புஜத்தம்மாள்

(B)அசலாம்பிகை அம்மையார்

(C)அஞ்சலையம்மாள்

(D)கோதைநாயகி

8. பொருத்துக.

a.சிங்கம் கனைத்தது – 1. மரபுவழு

b.கண்ணன் படித்தான் - 2. பால்வழு

c.இன்று வருவான் - 3. கால வழு

d.கபிலன்பேசியது – 4. திணை வழு

e.பறவைகள் பறந்தது – 5. எண் வழு

(A)1 2 3 4 5

(B)5 4 3 2 1

(C)2 1 4 3 5

(D)4 3 2 1 5

9. கீழ்க்கண்ட கூற்றை கவனி:
   1. வீரமும் நுண்ணறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர் வேலுநாச்சியார்
   2. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி – வேலுநாச்சியார்
   3. முத்துவடுகநாதர் 1772ல் இறந்தார்
   4. ஐதர் அலி ஐம்பதாயிரம் படைவீரர்களை வேலுநாச்சியாருக்காக அனுப்பினார்.
   5. 1770ல் சிவகங்கையை வேலுநாச்சியார் மீட்டார்

   மேற்கண்டவற்றில் சரியானது.

   (A) 1, 2, 3
   (B) 3, 4, 5
   (C) 1, 3, 5
   (D) 2, 4

10. புகழெனின் உயிரும் கொடுக்குவர்
    புழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல்

    (A) அகநானூறு
    (B) புறநானூறு
    (C) கலித்தொகை
    (D) நற்றிணை

11. தவறான வினாத்தொடர் எது?

    (A) திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையா?
    (B) சூசையப்பர் இயற்றிய நூல் தேம்பாவனியா?
    (C) சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமையாசிரியரா?
    (D) மதங்க சூளாமணி நூலினை சுவாமி விபுலானந்தர் எழுதினரா?

12. அஞ்சலையம்மாள் கலந்து கொண்ட போராட்டங்களில் தவறானது எது.
    1. நீலன் சிலையை அகற்றுதல்
    2. உப்புக் காய்ச்சும் போராட்டம்
    3. மறியல் போராட்டம்
    4. தனியாள் அறப் போராட்டம்
    5. வெள்ளையனே வெளியேறு இயக்கம்

    (A) 1 மட்டும்
    (B) 2, 3 மட்டும்
    (C) 4, 5 மட்டும்
    (D) எதுவுமில்லை

13. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. கம்பரை போற்றியவர் சடையப்ப வள்ளல்
2. கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது
3. காண்டம் - உட்பிரிவு, படலம் - பெரும்பிரிவு
4. சரயு நிதி – உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ளது

மேற்கண்டவற்றில் தவறானது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 4 மட்டும்

14. நான் கண்ட பாரதம் என்னும் அரிய நூலை எழுதியவர் யார்? ----- ஆண்டு தாமரைத்திரு (பத்மஸ்ரீ) விருது பெற்றார்.

(A) அம்புஜத்தம்மாள், 1964

(B) அஞ்சலையம்மாள், 1974

(C) அசலாம்பிகை அம்மையார், 1984

(D) கோதை நாயகி, 1964

15. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. அ, ஆ – வாய் திறத்தலாகிய முயற்சியால்
2. இ, ஈ, எ, ஏ, ஐ- வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால்
3. உ, ஊ, ஒ, ஓ, ஔ – வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால்

மேற்கண்டவற்றில் சரியானது.

(A) 1 மட்டும் சரி

(B) 2 மட்டும் சரி

(C) 3 மட்டும் சரி

(D) அனைத்தும் சரி

16. பொருத்துக.

a. புல், மரம் - 1. ஈரறிவு

b. மெய் - 2. ஓரறிவு

c. நத்தை, சங்கு - 3. நாலறிவு

d. கரையான், அட்டை - 4. மூவறிவு

e. நண்டு, தும்பி, வண்டு - 5. ஆறறிவு

f. விலங்கு, பறவை - 6. ஐயறிவு

(A) 1 2 3 4 5 6

(B) 6 5 4 3 2 1

(C) 1 2 4 3 6 5

(D) 2 1 4 3 6 5

17. ஊர் நீங்கினான் என்பது எவ்வகையான வேற்றுமை

(A) இரண்டாம் வேற்றுமை

(B) மூன்றாம் வேற்றுமை

(C) நான்காம் வேற்றுமை

(D) ஐந்தாம் வேற்றுமை

18. எந்த நாள் உலக வனவிலங்கு நாள் கொண்டாடப்படுகிறது.

(A) அக்டோபர் திங்கள் முதல் நாள்

(B) அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள்

(C) அக்டோபர் திங்கள் மூன்றாம் நாள்

(D) அக்டோபர் திங்கள் நான்காம் நாள்

19. பொருத்துக.

a. ஆந்தை - 1. கரையும்

b. காகம் - 2. அலறும்

c. சேவல் - 3. குனுகும்

d. புறா - 4. கூவும்

(A) 1 2 3 4

(B) 4 2 3 1

(C) 2 1 4 3

(D) 3 2 1 4

20. பொருத்துக.

a. வளவன் பள்ளியைக் கட்டினான் - அழித்தல்

b. சோழன் பகைவரை அழித்தான் - ஆக்கல்

c. தென்மொழி கோவிலை அடைந்தாள் - நீத்தல்

d. குழகன் சினத்தை விடுத்தான் - அடைதல்

e. கயல்விழி குயிலைப் போன்றவள் - உடைமை

f. கண்ணன் செல்வத்தை உடையவன் - ஒத்தல்

(A) 1 2 3 4 5 6

(B) 6 5 4 3 2 1

(C) 2 1 4 3 6 5

(D) 3 4 5 6 1 2

21. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. எழுவாய் வேற்றுமை – முதல் வேற்றுமை

2. செயப்படுபொருள் வேற்றுமை – இரண்டாம் வேற்றுமை

3. விளி வேற்றுமை – எட்டாம் வேற்றுமை

மேற்கண்டவற்றில் எத்தனை இணை சரி

(A) 1

(B) 2

(C) எதுவுமில்லை

(D) 3

22. பொருத்துக.

a. வளர்பிறை – 1. உம்மைத்தொகை

b. செம்மொழி – 2. உவமைத்தொகை

c. கயல்விழி – 3. பண்புத்தொகை

d. மா பலா வாழை – 4. வினைத்தொகை

(A) 1 2 3 4

(B) 4 3 2 1

(C) 2 1 4 3

(D) 3 4 2 1

23. கீழ்கண்ட பத்தியில் உள்ள மரபு பிழை.
சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூக்கொய்ய நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கூவிக் கொண்டிருந்தது. பூவை கொய்ததுடன் தோரணம் கட்ட மாவிலையையும் பறித்துக் கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலை பருகி விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.
(A) கொக்கரிக்கும்
(B) கொய்ய
(C) கூவி
(D) பருகி

24. தவறானது எது.
(A) மணியில் ஒலி - இல்
(B) வீட்டின் கண் பூனை – கண்
(C) அவனுக்கு என்மேல் வெறுப்பு – மேல்
(D) பெட்டியில் பணம் உள்ளது – ஆல்

25. எத்தனை இணை சரி?
1. கபிலன் வந்தான் - எழுவாயத்தொடர்
2. கதிரா வா – விளித்தொடர்
3. கண்டேன் சீதையை – வினைமுற்றுத் தொடர்
4. விழுத்த மரம் - பெயரெச்சத்தொடர்
5. ந்து போனான் - வினையெச்சதொடர்
6. வீட்டைக் கட்டினான் - வேற்றுமை தொகாநிலைத்தொடர்
7. மற்றொன்று - இடைச்சொற்றொடர்
8. மாமுனிவர் - உரிச்சொற்றொடர்
9. வாழ்க வாழ்க – அடுக்குத்தொடர்

(A) 5 இணை
(B) 6 இணை
(C) 9 இணை
(D) 8 இணை

26. பொருத்துக.
a. இளங்கோடிவகள் - சிலப்பதிகாரம்
b. திருத்தக்கதேவர் - சீவகசிந்தாமணி
c. கம்பர் - கம்பராமாயணம்
d. திருவள்ளுவர் - திருக்குறள்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 2 4 1

27. தவறான இணை எத்தனை.

பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு

1. கோர்த்து – கோத்து
2. சுவற்றில் - சுவரில்
3. நாட்கள் - நாள்கள்
4. மனதில் - மனத்தில்
5. பதட்டம் - பதற்றம்
6. சிலவு – செலவு
7. அருகாமையில் - அருகில்

(A) 0 இணை
(B) 4 இணை
(C) 3 இணை
(D) 6 இணை

28. சரியானது எது?

1. ஓர் மாவட்டம்
2. ஓர் அமைச்சர்
3. அவருடைய மகனோடு
4. மேற்கொண்டார்
5. அந்த சுற்றுலா
6. அவர்தாம்

(A) 1 2 3
(B) 4 5 6
(C) 1 3 5
(D) 2 3 6

29. அரபு எண்களுக்கு ஏற்ற தமிழெண்களில் சரியானது.

1. 10 – க0
2. 20 – க0
3. 19 – ககூ
4. 15 – கரு

(A) 1, 2
(B) 3, 4
(C) 1, 2, 3, 4
(D) 1, 2, 4

30. உரிய மரபுத்தொடர்களை காண்க.
கதிரவனுக்கு உலகில் நடப்பது எதுவும் தெரியாது. அவன் ஒரு ------
(A) புத்தகப்பூச்சி
(B) கயிறு திரித்தல்
(C) கிணற்றுத்தவளை
(D) பெருஞ்செலவாணி

31. உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேன் - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல்
(A) திருமுருகன் பள்ளி
(B) மணிமேகலை
(C) சிலப்பதிகாரம்
(D) திருமந்திரம்

32. எத்தனை இணை தவறு
1. தாளம் போடுகின்றான் - துன்பப்படுதல்
2. கயிறு திரிப்பது – இல்லாததனைச் சொல்லுதல்
3. கொடிகட்டிப்பறந்தார் - தனிப்புகழோடு வாழ்ந்தார்
4. முதலைக்கண்ணீர் - பொய்யாக அழுதல்
5. ஆணை வந்துவிட்டது – வேலை கிடைத்துவிட்டது.
(A) 0 இணை
(B) 2 இணை
(C) 3 இணை
(D) 4 இணை

33. அன்னை கஸ்தூரிபாயின் தோற்றத்தால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தவர்
(A) மூவலூர் இராமாமிர்தம்
(B) அஞ்சலையம்மாள்
(C) அம்புஜத்தம்மாள்
(D) அசலாம்பிகை

34. வீரமாமுனிவர் இயற்றிய நூல்களில் தவறானது எது.
1. ஞானோபதேசம்
2. பரமார்த்தகுரு கதை
3. திருக்காவலூர்க் கலம்பகம்
4. தொன்னூல் விளக்கம்
5. கித்தேரியம்மாள் அம்மாணை
(A)1, 2, 3
(B)4, 5
(C)1, 3
(D)எதுவுமில்லை

35. கீழ்க்காண்பவற்றுள்ள சரியானவற்றைத் தேர்ந்தெடு. பாரதிதாசன்
   (A) கன்னல் பொருள்தரும் தமிழே நீ ஓர் பூக்காடு: நானோர் தும்பி
   (B) உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு, இருட்டறையில் உள்ளதடா உலகம்
   (C) தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
   (D) அனைத்தும் சரி

36. பொருத்துக.
   a. வள்ளைக் கொடிகள் மலிந்த மன்னன் - 1. கலிங்கநாடு
   b. ஏழிசை சங்கத்து தலைவன் - 2. குருநாடு
   c. ஆண்யாணை போன்றவன் - 3. யதுகுல
   d. தெளிந்த நீர் வளமுடைய மன்னன் - 4. அவந்திநாடு
   (A) 1 2 3 4
   (B) 2 4 3 1
   (C) 2 3 4 1
   (D) 3 1 4 2

37. கம்பராமாயணம் நூல் குறிப்பு பற்றி பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடு.
   (A) கம்பர், வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் காப்பியம் இயற்றினார். எனவே இது வழிநூல் ஆகும்.
   (B) கம்பர் இயற்றிய இந்நூலுக்கு இராமாயணம் என்று பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என வழங்கலாயிற்று
   (C) கம்பருடைய காலம் கி.பி. 12ம் நூற்றாண்டு
   (D) கம்பராமாயணத்தில் பெரும்பிரிவாக காண்டமும், உட்பிரிவாக படலமும் விளங்குகிறது.

38. பொருத்துக.
   a. வாழை + பழம் – 1. தோன்றல்
   b. மா + பழம் – 2. இயல்பு
   c. வடக்கு + திசை – 3. திரிதல்
   d. அல் + திணை – 4. கெடுதல்
   (A)2 3 4 1
   (B)2 1 4 3
   (C)3 4 2 1
   (D)1 4 3 2

39. பொருத்துக.

ஒருபொருள் - பல சொற்கள்

a. மிகுதி – 1. பிள்ளை, குழவி, மகவு, சேய்

b. சூரியன் – 2. புவி, தரணி, நானிலம், பார், வையம்

c. குழந்தை – 3. ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன்

d. உலகம் – 4. சால, தவ, நனி, கூர், கழி

(A) 4 3 2 1

(B) 3 2 1 4

(C) 4 3 1 2

(D) 4 1 3 2

40. பொருத்துக.

a. அமுதன் வந்தது – 1. இடவழு

b. மாதவி பேசினான் – 2. எண் வழு

c. குதிரைகள் கனைத்தது – 3. பால்வழு

d. யாழினி சிரித்தாள் – 4. திணைவழு

(A) 2 3 4 1

(B) 3 4 2 1

(C) 3 2 4 1

(D) 4 3 2 1

41. கீழ்காணும் கூற்றுகளில் சரியான ஒற்றைத் தேர்ந்தெடு.

(A) தாயுமானவரின் பெற்றோர் கேடிலியப்பர் - கெசவல்லி அம்மையார், மனைவி மட்டுவார் குழலி

(B) தாயுமானவர் காலம் கி.பி. 18ம் நூற்றாண்டு

(C) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு 1452 பாடல்களை கொண்டது.

(D) அனைத்தும் சரி

42. நளவெண்பாவில் காணப்படும் காண்டங்களை வரிசைப்படுத்துக.

(A)கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம், சுயம்வரகாண்டம்

(B)சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்

(C)கலிநீங்கு காண்டம், கலிதொடர் காண்டம், சுயம்வர காண்டம்

(D)சுயம்வர காண்டம், கலிநீங்கு காண்டம், கலிதொடர் காண்டம்

43. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு. முடியரசன்
   (A) பிறந்த ஊர் முடியரசன்
   (B) இயற்றிய நூல்கள்: பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள்
   (C) இயற்பெயர்: துரை மாணிக்கம்
   (D) பறம்பு மலையில் நடந்தவிழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது. பாரதிதாசன் பரம்பரைத்தலைமுறைக் கவிஞருள் மூத்தவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கி பழகியவர்

44. நாங்கள் கவிராசர்கள் என்று செருக்குடன்கூறிய புலவர்களின் செருகை அடக்கும்படி கவி என்பதற்கு குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு பாடியவர் யார்.
   (A) பாரதிதாசன்
   (B) அழகிய சொக்கநாதப்புலவர்
   (C) கவிமணி தேசிக விநாயகனார்
   (D) கவி காளமேகப்புலவர்

45. கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடு.
   (A) பவளக்கொடி – பரிதிமாற்கலைஞர்
   (B) மனோகரன் - பம்மல் சம்பந்தனார்
   (C) இலவகுசா – சுந்தரனார்
   (D) பிரகலாதன் - சண்முகனார்

46. திருமந்திரத்தின் புகழ்மிக்க தொடர் எது.
   (A) உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே
   (B) ஒன்று குலம் ஒருவனே தேவன்
   (C) உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
   (D) உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

47. செய்யுள் வடிவில் இயற்றிய நாடகவியல் என்னும் நூலை இயற்றியவர் யார்.
   (A) பரிதிமாற்கலைஞர்
   (B) பம்மல் சம்பந்தனார்
   (C) சங்கரதாசு சுவாமிகள்
   (D) மறைமலையடிகள்

48. ஈடின் மாணிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் - என்று பாடியவர் யார்.
   (A) திருமூலர்
   (B) சீத்தலைச்சாத்தனார்
   (C) கம்பர்
   (D) வள்ளலார்

49. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு. பிள்ளைத்தமிழ்
   (A) பிள்ளைத்தமிழ் 96 சிற்றிலக்கிய வகைகள் ஒன்று. இறைவனையோ, நல்லாரையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ்
   (B) பத்து பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப் பாடலென நூறு பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ்
   (C) பத்துப் பருவங்களில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானது.
   (D) இறுதி மூன்று பருவங்களான அம்மானை, கழங்கு (நீராடல்), ஊசல் என்பன ஆண்பாலுக்கும், சிற்றில், சிறுபைற, சிறுதேர் ஆகியன பெண்பாலுக்கும் உரியன.

50. பொருத்துக.

| தொடங்கும் அடி | | பாவகை |
|---|---|---|
| a. கேடில் விழுச்செல்வம் | – | 1. கலிப்பா |
| b. கண்இமைத்த லாலடிகள் | – | 2. ஆசிரியப்பா |
| c. நாடா கொன்றோ காடா கொன்றோ | – | 3. நேரிசை வெண்பா |
| d. உயர்வற உயர்நலம் உடையவன் | – | 4. குறள் வெண்பா |

(A)4 3 2 1
(B)3 4 1 2
(C)4 1 3 2
(D)4 2 3 1

51. மயிரிக எல்லாராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது – என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்
(A)இன்னா நாற்பது
(B)இனியவை நாற்பது
(C)திரிகடுகம்
(D)சிறுபஞ்சமூலம்

52. பொருத்துக.
a.நீரவர் – 1. இறைவன்
b.பேதையார் – 2. அறிவுடையார்
c.கிழமை – 3. அறிவிலாதார்
d.பராபரம் – 4. உரிமை
(A)2 3 4 1
(B)4 3 2 1
(C)3 4 2 1
(D)1 4 3 2

53. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
(A) தேம்பாவணி, காவலூர்க் கலம்பகம், கதம்பமாலையாகக் காட்சியளிக்கின்றது.
(B) தொன்னூல் விளக்கம் - பொன் நூலாக இலங்குகின்றது.
(C) சதுரகராதி – முத்தாராமாக மிளர்கின்றது.
(D) அனைத்தும் சரி

54. பொருந்தாத மரபுச் சொல்லை தேர்ந்தெடுக்க.
(A)குமரன் பழம் உண்டான்
(B)காலையில் சேவல் கூவியது
(C)ஆட்டு மந்தை வருகிறது.
(D)எங்கள் ஊரில் வாழைத்தோப்பு உள்ளது

55. சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் அமைந்து, இரண்டுக்கும் இடையில் ஆகிய என்னும் உருபு மறைந்து வந்தால் ------ எனப்படும்.
(A)உவமைத்தொகை
(B)உம்மைத்தொகை
(C)அன்மொழித்தொகை
(D)இருபெயரெட்டு பண்புத்தொகை

56. கீழ்க்காணும் கூற்றுகளில் வள்ளலார் பற்றிய தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) பெற்றோர்: இராமையா – சின்னம்மை. இயற்பெயர் - இராமலிங்க அடிகள்

(B) இவரை திருவருட் பிரகாச வள்ளலார் என அழைத்தவர் தஞ்சை வேதநாயகம்

(C) சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் பிறந்தவர். திருவருட்பா, ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமறை கண்ட வாசகம் ஆகியவற்றை இயற்றினார்.

(D) வடலூரில் சமரச சுத்த சன்மார்க்கசபை, சத்தியஞானசபை, சத்திய தருமச்சாலை, ஆகியவற்றை நிறுவினார்.

57. பொருத்துக.

a.தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் – 1. கால்டுவெல்

b.தனித்தமிழுக்கு வித்திட்டவர் – 2. மறைமலையடிகள்

c.தமிழை தழைக்கச் செய்த செம்மல் – 3. பரிதிமாற்கலைஞர்

d.தமிழை ஆலென வளர்த்து மாண்புச் செய்தவர் – 4. தேவநேயப்பாவாணர்

(A)1 2 3 4

(B)1 3 2 4

(C)1 4 3 2

(D)2 4 3 1

58. வரிசைப்படுத்துக. (காலம்)

(A)திருமூலர் - தாயுமானவர் - மௌனகுரு – குணங்குடி மஸ்மான் சாகிபு

(B)தாயுமானவர் - மௌனகுரு – திருமூலர் - குணங்குடி மஸ்தான் சாகிபு

(C)மௌனகுரு – திருமூலர் - தாயுமானவர் - குணங்குடி மஸ்தான் சாகிபு

(D)திருமூலர் - மௌனகுரு – தாயுமானவர் - குணங்குடி மஸ்தான் சாகிபு

59. ஒளியைக் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும்படி செய்யலாம் என்று கண்டவர் யார்.

(A)நிகோலஸ் கிராப்ஸ்

(B)கலீலியோ

(C)கோபர்நிகஸ்

(D)நியூட்டன்

60. பொருத்துக.

a. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் –1. பண்பாற்றாரால் கடை

b. அரம்போலும் கூர்மையாரேனும் மரம் போல்வர் – 2. பண்புடைமை என்னும் வழக்கு

c. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம் – 3. மக்கட்பண்பு இல்லாதவர்

d. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும் – 4. பகலும்பாற் பட்டன் றிருள்

(A)4 3 2 1

(B)3 4 2 1

(C)4 2 1 3

(D)2 3 4 1

61. நந்தமிழைக் கற்றுத் தமிழும் இலக்கண இலக்கியங்கள் இயற்றித் தமிழுக்கு மாபெரும் தொண்டாற்றியவர் யார்.

(A)வீரமாமுனிவர்

(B)இரா.பி.சேதுப்பிள்ளை

(C)குணங்குடிமஸ்தான் சாகிபு

(D)ஆறுமுகநாவலர்

62. பொருத்துக.

a.இயற்சொல் – 1. கொணர்ந்தாள், மறைமொழி

b.திரிசொல் – 2. தண்ணீர், மாலை

c.திசைச்சொல் – 3. ரோஜா, பூஜை

d.வடசொல் – 4. கேணி, அந்தணர்

(A)4 3 2 1

(B)2 1 4 3

(C)3 4 1 2

(D)4 2 3 1

63. பொருத்துக.

a.மக்கள் - 1. கற்றை

b.வீரர் – 2. கூட்டம்

c.விறகு – 3. கட்டு

d.சுள்ளி – 4. படை

(A)1 2 3 4

(B)2 4 3 1

(C)4 2 1 3

(D)3 1 4 2

64. கீழ்க்காணும் கூற்றுகளில் வீரமாமுனிவர் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
(A) இயற்பெயர் - கொண்டல் போபெஸ்கி
(B) பிறந்த நாடு - இத்தாலியில் உள்ள காஸ்திக் கிளியோன்
(C) இயற்றிய நூல்கள் - ஞானோபதேசம், பரமார்த்தகுரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை
(D) தேம்பாவணி என்னும் நூலும் இவர் இயற்றிய நூலாகும்.

65. பொருத்துக.
a. கட்டு + சோறு – 1. இயல்பு விகாரம்
b. கண் + மலர் – 2. கெடுதல் விகாரம்
c. வளம் + நூல் – 3. திரிதல் விகாரம்
d. முள் + செடி – 4. தோன்றல் விகாரம்
(A)4 1 2 3
(B)1 2 4 3
(C)4 3 2 1
(D)1 2 3 4

66. மொழிஞாயிறு, தனித்தமிழ் ஊற்று, செந்தமிழ் ஞாயிறு, இலக்கியப் பெட்டகம், இலக்கணச்செம்மல், தமிழ் மானங்காத்தவர், தமிழ, தமிழர் நலம் காப்பதனையே உயிர் மூச்சாகக் கொண்டவர் யார்.
(A)கால்டுவெல்
(B)மறைமலையடிகள்
(C)பரிதிமாற்கலைஞர்
(D)தேவநேயப்பாவாணர்

67. பொருத்துக.
a. நறவம் – 1. ஞாயிறு
b. கிரணம் – 2. கடல்
c. சலதி – 3. தேன்
d. பருதி – 4. ஒளி
(A)2 1 4 3
(B)3 4 2 1
(C)2 3 4 1
(D)4 3 2 1

68. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு- என்ற திருக்குறளில் அமைந்துள்ள அணியை குறிப்பிடுக
(A)வேற்றுமையணி
(B)தொழிலுவமையணி
(C)உவமையணி
(D)எடுத்துக்காட்டுஉவமையணி

69. கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே – என்ற பாடலடியை பாடியவர்
(A)குணங்குடி மஸ்தான் சாகிப்பு
(B)தாயுமானவர்
(C)மாணிக்கவாசகர்
(D)வள்ளலார்

70. பொருத்துக.
a.பீலி – 1. நகம்
b.உகிர் – 2. மயில்தோகை
c.ஆழி – 3. தாமரை
d.கமலம் – 4. கடல்
(A)2 1 4 3
(B)2 3 4 1
(C)4 3 2 1
(D)2 3 1 4

71. ஏழிசைநூல் சங்கத்(து) இருந்தானும் - நீள்விசும்பின்
நல்தேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய் இச்சேய் - என்று அழைக்கப்படும் மன்னன்
(A)நிடதநாட்டு மன்னன்
(B)குருநாட்டு மன்னன்
(C)யதுகுலத்தோன்றல்
(D)அங்கநாட்டு மன்னன்

72. சந்திப்பிழைகளற்ற தொடரை தேர்ந்தெடுத்து எழுதுக.
(A) கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது
(B) கடந்த இருபதாண்டு கணினி பயணத்தில் இணைத்தியன் பங்கு மிகச் சிறந்தது
(C) கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது.
(D) கடந்த இருபதாண்டு கணினி பயணத்தில் இணையத்தின் பங்கு மிக சிறந்தது.

73. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

கூற்று 1- அடுக்குத்தொடர் பிரித்தால் பொருள் தரும்

கூற்று 2 – விரைவு, வெகுளி, உவமை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும்

(A)கூற்று 1 சரி 2 தவறு

(B)கூற்று 1 2 தவறு

(C)கூற்று 1 2 சரி

(D)கூற்று 1 தவறு 2 சரி

74. சரியான இணை எது.

1.வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் - 1973

2.தேசிய வனவிலங்கு பூங்கா – 368

3.உலக வனவிலங்கு நாள் - அக்டோபர் 4

4.உலக வனவிலங்கு வாரம் - அக்டோபர் 2ம் வாரம்

(A)1

(B)2

(C)3

(D)4

75. கீழ்க்காண்பவற்றுள் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு. செய்வினைத்தொடர்

(A)கலையரசி துணியை தைத்தாள்

(B)ஆசிரியர் பாடத்தை நடத்தினார்

(C)பாரி கபிலரால் போற்றப்பட்டார்

(D)பூங்குழல் உணவை சமைத்தாள்

76. பொருத்தமற்ற மரபுச் சொல்லை தேர்ந்தெடு.

1.சிங்கக்குருளை

2.புலிப்பறழ்

3.யானைக்கன்று

4.மான்கன்று

5.பன்றிக்குட்டி

6.எருமைக்கன்று

(A)1 தவறு

(B)3 4 தவறு

(C)1 2 3 4 தவறு

(D)அனைத்தும் சரி

77. உரிய எழுத்து வழக்கு ஒன்றைத் தேர்ந்தெடு.
(A)மாலையைக் கோர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்
(B)சுவற்றில் எழுதாதே
(C)நாட்கள் நகர்ந்து கொண்டே செல்கிறது.
(D)மனத்தில் வைத்து கொள்ள வேண்டும்.

78. கீழ்க்காண்வற்றுள் பாரதிதாசன் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
(A) இயற்பெயர்: சுப்புரத்தினம், பெற்றோர்: கனகசபை - இலக்குமி
(B) பிறந்தஊர்: புதுச்சேரி, காலம் 29.04.1891 முதல் 21.04.1964
(C) படைப்புகள்: பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கும், இருண்டவீடு, அழகின்சிரிப்பு, கண்ணகி புரட்சிக்காப்பியம், குறிஞ்சித்திட்டு, தமிழயக்கம்.
(D) மக்கள் கவிஞர் எனவும் அழைக்கப்படுகிறார்.

79. உலக முதன் மொழி தமிழ்: இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும்தமிழ்: திராவிட மொழிகளுக்குத் தாய்மொழிதமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவிய செம்மல் யார்?
(A)கால்டுவெல்
(B)மறைமலையடிகள்
(C)தேவநேயப்பாவாணர்
(D)பரிதிமாற்கலைஞர்

80. புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும் - என்ற திருக்குறளில் பயின்று வந்துள்ள அணியைக் குறிப்பிடுக.
(A)வேற்றுமையணி
(B)தொழிலுவமையணி
(C)உவமையணி
(D)எடுத்துக்காட்டு உவமையணி

81. தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.
1. சுடர் - ஒளி
2. ஆனந்தம் - மகிழ்ச்சி
3. பராபரம் - இறைவன்
4. ஆன்ற – உயர்ந்த
(A)1
(B)2
(C)4
(D)எதுவுமில்லை

82. தமிழ்ப்புலமையையும் ஆங்கிலப் புலமையும் ஒருசேர கைவரப்பெற்று இருமொழி கற்பிக்கும் ஆசிரியராக திகழ்ந்தவர்.
(A)மீனாட்சி சுந்தரனார்
(B)குணங்குடி மஸ்தான் சாகிபு
(C)ஆறுமுக நாவலர்
(D)உ.வே.சா

83. பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை – என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை – என்று பாடியவர் யார்?
(A)அசலாம்பிகை அம்மையார்
(B)பூதஞ்சேந்தனார்
(C)க.சச்சிதானந்தன்
(D)விளம்பிநாகனார்

84. கீழ்க்காண்பவற்றுள் தவறானவற்றைத் தேர்ந்தெடு. பூதஞ்சேந்தனார்
(A) பிறந்த ஊர்: மதுரை, இவர் மதுரைத் தமிழாசிரியர் மகனார்.
(B) காலம் - கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
(C) இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நன்மை தரும் இனிய கருத்துக்களை 40 பாடல்களில் தொகுத்துரைப்பதால் இனியவை நாற்பது
(D) இவற்றுள் ஏதுமில்லை

85. திருவள்ளுவமாலை பற்றி கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடு.
(A) இந்நூலில் 55 பாடல்களை 53 புலவர்கள் பாடியுள்ளார்கள்
(B) இந்நூலில் அறிவியல் அணுகுமுறை சார்ந்த பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.
(C) ஒளியைக்கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும்படி செய்யலாம் என்று கண்டவர் கலீலியோ கலிலி.
(D) அனைத்தும் சரி

86. பொருத்துக.
a. இராமநாடகம் – 1. காசிசுவநாதர்
b. நந்தனார் சரித்திரம் – 2. விபுலானந்தர்
c. மதங்கசூளாமணி – 3. கோபால கிருட்டின பாரதியார்
d.டம்பாச்சாரிவிலாசம் – 4. அருணாச்சலக் கவிராயர்
(A)4 3 2 1
(B)3 4 2 1
(C)4 3 1 2
(D)1 4 3 2

87. கீழ்க்காணும் கூற்றுகளில் கம்பரை பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(A) பிறந்த ஊர்: நாகை மாவட்டம் வேதாரண்யம் (திருமறைக்காடு) என்னும் ஊர்

(B) கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல்

(C) இவர் இயற்றிய நூல்கள்: சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்

(D) இவற்றுள் ஏதுவுமில்லை

88. பொருத்துக.

a.பால்வீதி – 1. தாலமி, அரிஸ்டாட்டில்

b.சூரியனை சுற்றியே புவி நகர்கிறது – 2. நிக்கோலஸ் கிராபஸ்

c.உலகம் உருண்டையானது – 3. கலீலியோ

d.நிலம் அண்டத்தின் மையப்பகுதி – 4. கோபர் நிகஸ்

(A)4 2 3 1

(B)2 3 4 1

(C)3 4 2 1

(D)1 4 3 2

89. சொற்றொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக.

(A)முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்

(B)குளம் முனையிலே மூணு முள்ளு வெட்டினேன்

(C)முனையிலே மூணு குளம் முள்ளு வெட்டினேன்

(D)மூணு முள்ளு முனையிலே குளம் வெட்டினேன்

90. பொருத்துக.

a.மல்டிமீடியா கேம்ஸ் – 1. மாற்றுவிசைக் குமிழி

b.டவுன்லோட் – 2. பல்லூடக விளையாட்டுகள்

c.சாட்டிங் – 3. பதிவிறக்கம்

d.ஷிப்ட் கீ – 4. கருத்துப் பரிமாற்றம்

(A)4 3 2 1

(B)3 4 2 1

(C)2 4 3 1

(D)2 3 4 1

91. பொருத்துக.

a.ஆழி – 1. எருமை

b.விசும்பு – 2. நிலம்

c.காசினி – 3. வானம்

d.மேதி – 4. கடல்

(A)4 3 2 1

(B)4 1 3 2

(C)3 1 4 2

(D)1 4 3 2

92. பொருத்துக. விவேகசிந்தாமணி

a.வண்டு – 1. கூறினாள்

b.மங்கையின் முகம் – 2. வான் நிலவு

c.புகன்றாள் – 3. நாவற்பழம்

d.மலர்க்கரம் – 4. தாமரை

(A)1 2 3 4

(B)3 2 1 4

(C)3 1 2 4

(D)4 3 2 1

93. பொருத்துக.

a.செந்நிறமாய் இருக்கும் கோள் – 1. சனி

b.வெண்மை நிறமுடைய கோள் – 2. புதன்

c.புதிதாகக் கண்டறிந்த கோள் – 3. செவ்வாய்

d.காரிக்கோள் – 4. வெள்ளி

(A)2 3 4 1

(B)3 4 2 1

(C)3 2 4 1

(D)4 1 2 3

94. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு?

தேவநேயப்பாவாணர்

1. பிறந்த ஊர்: சங்கரன் கோவில். கல்வி: பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைக்தமிழ், பி.ஓ.எல்
2. சிறப்பு: செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப் பெருங்காவலர் என 174 சிறப்பு பெயர்கள் உண்டு,
3. உலகின் முதல் மாந்தன் தமிழன், தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதுமு; மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பழந்தமிழரது நாகரிகமே என்பது பாவாணரது ஆய்வுபுலத்தின் இருகண்களாம்.
4. தனித்தமிழுக்கு வித்திட்டவர். தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர்.

(A)1, 2

(B)3, 4

(C)1, 2, 3

(D)1, 2, 3, 4

95. சொற்றொடரை ஒழுங்குபடுத்துக.

(A)மனநலத்திற்கும், உடல்நலத்திற்கும் நகைப்பு ஓர் அறிகுறி எழுச்சிக்கும்

(B)உடல்நலத்திற்கும், மனநலத்திற்கும், ஓர் அறிகுறி எழுச்சிக்கும் நகைப்பு

(C)மனநலத்திற்கும், உடல்நலத்திற்கும் எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறி

(D)உடல் நலத்திற்கும், மனநிலத்திற்கும், எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறி

96. உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில் உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது ----- அணியாகும்.

(A)உவமையணி

(B)உருவக அணி

(C)இயல்பு நவிற்சியணி

(D)ஏகதேச உருவக அணி

97. பொருத்துக.

a.அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட – 1. நாலடியார்

b.கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் – 2. புறநானூறு

c.உப்பிலிப் புழுக்கல் – 3. சீவகசிந்தாமணி

d.இறடிப் பொம்மல் பெறுகுவீர் – 4. மலைபடுகடாம்

(A)1 2 3 4

(B)4 3 2 1

(C)3 4 1 2

(D)4 1 3 2

98. பொருத்துக.

a.பேதையார் நட்பு – 1. உடுக்கை இழந்தவர் கை போன்றது

b.பண்புடையாளர் தொடர்பு – 2. வளர்பிறை போன்றது

c.அறிவுடையார் நட்பு – 3. நவில்தொறும் நூல்நயம் போன்றது.

d.இடுக்கண் களையும் நட்பு – 4. தேய்பிறை போன்றது

(A)2 3 4 1

(B)4 1 2 3

(C)1 2 3 4

(D)4 3 2 1

99. பொருத்துக.

a.Bulletin – 1. தலையங்கம்

b.Deadline – 2. சிறப்புச்செய்தி இதழ்

c.Folio No – 3. குறித்த காலம்

d.Editorial – 4. இதழ் எண்

(A)2 3 4 1

(B)4 3 2 1

(C)2 1 4 3

(D)1 4 3 2

100. பொருத்துக.

a.நவில்தோறும் – 1. துன்பம்

b.நயம் – 2. இன்பம்

c.அகம் – 3. கற்கக் கற்க

d.அல்லல் – 4. உள்ளம்

(A)3 2 4 1

(B)3 2 1 4

(C)3 4 1 2

(D)3 4 2 1

******